DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. S.Amalanatha Kamalakannan, B.A, B.L.,(Hon’s)
District Munsif (FAC), Uthamapalayam.

**OS.No.171/2023**

**CNR.No: TNTH06-000218 -2023 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்து (எ) முத்துக்கிருஷ்ணன் | Town | மதுரை |
| Father's Name | : வெங்கட்ராமன் | Taluk | : |
| Age | : 60 | **DW1** | |

---

நாள் : 14.11.2025

குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். தற்போது டிராவல் ஏஜென்ஸி வைத்து நடத்தி வருகிறேன். இதை தவிர்த்து வேறு தொழில் செய்யவில்லை. எத்தனை வருடமாக டிராவல் எஜென்ஸி வைத்திருந்தேன் என்றால் 2008 லிருந்து டிராவல் எஜென்ஸி நடத்தி வருகிறேன். வாதி தாக்கல் செய்த வழக்கின் விபரங்கள் மற்றும் ஆவணங்களை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அதனை படித்து பிறகு தான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். பிராதில் கூறியுள்ள மதுரை மாவட்டம், திருப்பாலை என்பது தான் எனது நிரந்தர முகவரி என்றால் சரிதான்.

2) பிராதில் உள்ள சொத்து விபரங்கள் மற்றும் உறவு முறைகள் சரியாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சுப்பிரமணியன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுப்பிரமணியன் என்பவருக்கு கும்பேஸ்வரன், எனது தகப்பனார் வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, ராமசந்திரன், ராசாத்தி, சரஸ்வதி என நான்கு மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். கும்பேஸ்வரன் என்பவர் காலமாகிவிட்டார் என்றும், அவரது வாரிசுகள் தற்போது இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். கடந்த 13.02.1964 ல் கிருஷ்ணமூர்த்தி, ராமசந்திரன், எனது

தகப்பனார் வெங்கட் ராமன் ஆகியோர் வழக்கு சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தான வீடானது கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமசந்திரன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இராமசந்திரன் என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டு, திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3) இராமசந்தின் இறக்கும்வரை யாருக்கும் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் இறந்துவிட்டால், அவரது சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு சென்றடையும் என்றால் சரிதான். அதன்படி தாவா சொத்தான வீடு எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். 02.03.2011 ம் தேதியில் தாவா சொத்தில் இராமசந்திரன் பாகத்தையும், கிருஷ்ணமூர்த்தியின் பாகத்தையும் சேர்த்து எனது தந்தை பெயருக்கு கிருஷ்ணமூர்த்தி விடுதலை பத்திரத்தின் மூலம் எழுதிக்கொடுத்ததாக நான் கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் சொத்தானது எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று நான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான்.

4) மேற்படி விடுதலைபத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். விடுதலை பத்திரத்தின் மூலம் எனது தந்தைக்கு கிடைத்த சொத்தை எனது தந்தை எனக்கு கொடுத்ததாக எதிருரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1964 ல் கிருஷ்ணமூர்த்தி தனது பாகத்தை இராமசந்திரனுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி ஏற்கனவே சொத்து எழுதிக்கொடுத்துள்ளநிலையில் 02.03.2011 ல் கிருஷ்ணமூர்த்தி தனது பாகத்தையும், இராமசந்திரன் பாகத்தையும், எனது தந்தைக்கு எழுதிக்கொடுத்ததாக போலியான பத்திரம் உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தை உண்மையான வாரிசுகளுக்கு செல்வதிலிருந்து தடுப்பதற்காக நானும், எனது தந்தையாரும் சேர்ந்து போலியான ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

5) 14.12.2019 ம் தேதியன்று வாதி, அவரது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பி போலியான ஆவணம் என்று கூறி அதனை ரத்து செய்யும்படி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வாசாஆ 4 அறிவிப்பு என்னால் பெறப்படாமல் திருப்பப்பட்டுள்ளது என்றால் எனது முகவரின் தெரு பெயர் குறிப்பிடாததால் அறிவிப்பு கிடைக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ 2 ல் உள்ள முகவரியும், வாதி அனுப்பிய முகவரியும், நீதிமன்றத்திலிருந்து அனுப்பிய முகவரியும் ஒன்று தான் என்றால் சரிதான். அறிவிப்பு அனுப்பிய பின்பு இதே நீதிமன்றத்தில் வாதிகள் மீது அசல் வழக்கு எண். 3/2020 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் ஆஜராகாததால் 09.06.2023 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6) அதன்பின்னர் 15.06.2023 ம் தேதியன்று நானும், எனது மகனும் சேர்ந்து 3 ம் பிரதிவாதி மணிமாறன் என்பவருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை ரத்து செய்யும் படி வாதிகள் 10.07.2023 ம் தேதியன்று எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளேன். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 18.10.2019 ம் தேதியன்று வாதிகள் தாவா சொத்திற்கு வந்து எனது தகப்பனாரை அத்துமீறி வெளியேற்ற முயற்சித்தார்கள் என்று கூறியுள்ளபோது, நான் அங்கு இல்லை என்றால் சரிதான். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி புகார்மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான்சொல்வது போல் எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் சம்பந்தமாக வாதிகளின் மீது

வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான விபரங்கள் அனைத்தும் எனது தகப்பனாருக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தகப்பனாரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவருக்கு 91 வயதானநிலையில், அவரால் நீதிமன்றத்திற்கு வர இயலாது. எனது தகப்பனாரை அழைத்து விசாரித்தால் உண்மைதன்மை தெரியவரும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என்னுடன் பிறந்த நபர்களுக்கும் பங்கு உள்ளது என்றும், அவர்களிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்று போலியான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பல உண்மைகளை மறைத்து பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2025.11.14 17:24:00 +0300

District Munisf (FAC),
Uthamapalayam.